**அரசு பொதுத் தேர்வு வினாத்தாள் – மார்ச்-2025**
**மேல்நிலை இரண்டாம் ஆண்டு – வணிகவியல்**
**கால அளவு: 3.00 மணி நேரம்    மொத்த மதிப்பெண்கள்: 90**

**பகுதி -I**

குறிப்பு: **(i)** அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
**(ii)** கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**20x1=20**

1. **இணையத்திற்கு நுழைவு வாயில் என்பது ________.**
**(அ) மோடம்**    **(ஆ) போர்டல்**
(இ) வெபினார்    (ஈ) சிபியு

2. **நிதிச் சந்தை, வணிக நிறுவனங்களுக்கு ________. உதவுகிறது.**
(அ) விற்பனையை அதிகரிப்பதற்கு
(ஆ) நிதிகளை திரட்டுவதற்கு
(இ) நிதித் தேவையை குறைப்பதற்கு
(ஈ) பணியாட்களை தேர்வு செய்வதற்கு

Padasalai.Net

3. **மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது எது ?**
(அ) திட்டமிடுதல்    (ஆ) புதுமைப்படுத்துதல்
(இ) முடிவெடுத்தல்    (ஈ) கட்டுப்படுத்துதல்

4. **செபியின் தலைமையகம் ________ ஆகும்.**
(அ) சென்னை    (ஆ) கல்கத்தா
(இ) தில்லி    (ஈ) மும்பை

5. **கூட்டு முதலீட்டு திட்டங்களின் செயல்பாட்டை பதிவு செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ________.** எனப்படுகிறது.
(அ) மறுபுறத்தோற்றமற்ற பத்திரங்கள்
(ஆ) பரஸ்பர நிதிகள்
(இ) புறத்தோற்றமற்ற பத்திரங்கள்
(ஈ) பட்டியல்

6. **NSEI தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு**
(அ) **1998**    (ஆ) **1990**    (இ) **1997**    (ஈ) **1992**

**7. நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார் ?**

(அ) ரால்ப் நாடர் (ஆ) மகாத்மா காந்தி
(இ) ஜவஹர்லால் நேரு (ஈ) ஜான் எப் கென்னடி

**8. வணிக மாற்றுச்சீட்டுகளை வாங்குவதற்கும் விற்பதற்குமான சந்தையை ________ என்று அழைக்கலாம்.**

(அ) வணிக இரசீது சந்தை (ஆ) வணிகத்தாள் சந்தை
(இ) மூலதனச் சந்தை (ஈ) கருவூல இரசீது சந்தை

**9. ஜி.எஸ்.டி. என்பது _________.**

(அ) சரக்கு மற்றும் விற்பனை வரி
(ஆ) சரக்கு மற்றும் சமூக வரி
(இ) சரக்கு மற்றும் ஊதிய வரி
(ஈ) சரக்கு மற்றும் சேவை வரி

**10. மாவட்ட மன்றத்தின் தலைவர் யார் ?**

(அ)உயர் நீதிமன்ற நீதிபதி
(ஆ) உச்ச நீதிமன்ற நீதிபதி
(இ) மாவட்ட நீதிபதி
(ஈ) மேலே குறிப்பிட்ட எவரும் இல்லை

Padasalai.Net

**11. பணி வழியற்ற பயிற்சி எங்கு அளிக்கப்படுகிறது?**

(அ) தொழிற்சாலைக்கு வெளியே
(ஆ) வகுப்பறையில்
(இ) விளையாட்டு மைதானத்தில்
(ஈ) வேலையில்லா நாட்களில்

**12. மேலாண்மை என்பது ஒரு ___________.**

(அ ) கலை மற்றும் அறிவியல் (ஆ) கலை
(இ) கலை அல்லது அறிவியல் (ஈ) அறிவியல்

**13. வணிகத்தொழில் முனைவோரைச் சாராத பணியைக் கண்டறிக.**

(அ) வாங்கல் (ஆ) விற்பனை
(இ) தயாரிப்பு (ஈ) கழிவு

**14. சந்தையில் உயர்நிலையில் இருப்பவர் யார் ?**

(அ) மொத்த விற்பனையாளர் (ஆ) வாடிக்கையாளர்
(இ) சில்லறை விற்பனையாளர் (ஈ) விற்பனையாளர்

**15. பணச்சந்தையில் முக்கிய பங்காற்றும் அமைப்பு ________.**

(அ) பாரத ஸ்டேட் வங்கி (ஆ) வணிக வங்கி
(இ) மைய வங்கி (ஈ) இந்திய ரிசர்வ் வங்கி

**16. திட்டமிடல் என்பது_________ செயல்பாடு ஆகும்.**

(அ) தேர்ந்தெடுக்கப்பட்ட
(ஆ) பரவலான /ஊடுருவலான
(இ) (அ) மற்றும் (ஆ) இரண்டும்
(ஈ) மேலே உள்ள எதுவும் இல்லை

**17. தேசியத் திறன் அபிவிருத்தி குறிக்கோள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு**

(அ) ஜூலை **2015** (ஆ) ஜூன் **2000**
(இ) மே **2010** (ஈ) ஆகஸ்டு **2008**

**18. நம்பிக்கையற்ற ஊக வணிகர்கள் என்பவர் :**

(அ) காளை (ஆ) மான்
(இ) முட வாத்து (ஈ) கரடி

**19. குறியிலக்கு மேலாண்மையானது __________ பிரபலபடுத்தப்பட்டது. என்பவரால் அமெரிக்காவில்**

(அ ) ஹென்றி பயோல்
(ஆ) பேராசிரியர் ரெட்டின்
(இ) எப்.டபிள்யூ. டெய்லர்
(ஈ) ஜார்ஜ் ஓடியோர்ன்

Padasalai.Net

**20. விளம்பரம் என்பது ஒரு_________ ஆட்சேர்ப்பு வளமாகும்.**

**(அ) முகவர்** **(ஆ) அக வளங்கள்**
(இ) புறத்திறனீட்டல் (ஈ) புற வளங்கள்

**பகுதி –II**

குறிப்பு : எவையேனும் **ஏழு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **வினா என் 30 -க்**கு கட்டாயமாக விடையளிக்கவும். **7X2=14**

21. செயலூக்கமளித்தல் என்றால் என்ன?
22. **OTCEI** பற்றி சிறு குறிப்பு வரைக.
23. துணைத் தரகர் என்றால் என்ன ?

**24.** மனித வள மேலாண்மை என்றால் என்ன**?**

**25.** தரப்படுத்துதல் என்றால் என்ன **?**

**26.** கலப்படம் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

**27.** மாவட்ட மன்றம் பற்றி கருக்கமாக விளக்கும்

**28.** வருநிகழ்வுசார் சரக்கு என்றால் என்ன**?**

**29.** வாக்கெடுப்பு என்றால் என்ன **?**

**30.** நீ ஒரு தொழில் முனைவராக இருந்தால், மூலதனத்தை எவ்வாறு திரட்டுவாய் **?**

## பகுதி -III

குறிப்பு : எவையேனும் **ஏழு** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **வினா எண் 40 -க்கு** கட்டாயமாக விடையளிக்கவும். **7x3=21**

**31.** டெய்லரின் மேலாண்மைத் தத்துவங்கள்' யாவை **?**

**32.** வணிக இரசீதின் வகைகளை விவரிக்கவும். **(**ஏதேனும் **3 )**

**33.** பங்கு சந்தையின் குறைபாடுகள் ஏதேனும் மூன்றை விவரி.

**34.** சாதாரண தீர்மானம் தேவைப்படும். ஏதேனும் மூன்று செயல்பாடுகளை தருக

**35,** சந்தையிடுகையாளரின் ஏதேனும் மூன்று பங்களிப்பை குறிப்பிடுக

Padasalai.Net

**36.** தேசிய ஆணையத்தின் உறுப்பினர்கள் யாவர்**?**

**37.** தாராளமயமாக்கல் என்றால் என்ன**?**

**38.** மாற்றுமுறை ஆவணத்தின் ஏதேனும் மூன்று அனுமானங்களை எழுதுக.

**39.** மந்தமான தொழில் முனைவோர் என்பவர் யார் **?**

**40.** பணியமர்த்தலின் முக்கியத்துவம் பற்றி ஏதேனும் மூன்றினை பட்டியலிடுக.

## பகுதி -IV

குறிப்ப: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் **7x5-35**

41. (அ) நவீன மேலாண்மையின் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் ஐந்து)

அல்லது

(ஆ) நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் அளிப்பதில் உள்ள படிநிலைகள் யாவை ? (ஏதேனும் 5)

42. (அ) தாராளமயமாக்கலின் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் பற்றி விளக்குக. (ஏதேனும் ஐந்து)

அல்லது

(ஆ) பணச்சந்தையின் சிறப்பியல்புகள் ஏதேனும் ஐந்தை விளக்குக

43. (அ) மனித வளத்தின் சிறப்பியல்புகளை விளக்குக. (ஏதேனும் ஐந்து)

அல்லது

(ஆ) நிர்வாகத்தில் முக்கிய நிர்வாக அதிகாரிகள் (KMP) என்பவர் யார்?

44. (அ) சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சி பற்றி விவரி (ஏதேனும் ஐந்து)

அல்லது

(ஆ) செல்தகு மேலெழுத்தின் அடிப்படைக் கூறுகளைக் கூறுக (ஏதேனும் ஐந்து)

45. (அ) பல்வேறு வகையான நிதிச் சந்தைகளை விவரி. (ஏதேனும் ஐந்து)

அல்லது

(ஆ) பல்வேறு வகையான சோதனைகளை விவரி. (ஏதேனும் ஐந்து)

Padasalai.Net

46. (அ) அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தினை விளக்குக. (ஏதேனும் ஐந்து)

அல்லது

(ஆ) விதி விலக்கு மேலாண்மையின் நன்மைகள் யாவை ? (ஏதேனும் ஐந்து)

47. (அ) குறிப்பு வரைக :

(i) தேசிய பங்குச் சந்தை (NSE)

(ii) தேசிய பத்திர வைப்பகங்கள் வரையறுக்கப்பட்டது (NSDL)

அல்லது

(ஆ) தொழில் முனைவின் முக்கியத்துவத்தை விவரி. (ஏதேனும் ஐந்து)

******